<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண். 62/2017</u>

DW1 – திரு. ராஜேந்திரன் நாள். 05.12.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி. விஜயலெட்சுமி என்பவர் சாட்சியிடம் சத்திய பிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. எனக்கு பூர்விகம் மதுரை மாவட்டம், வாகைகுளம் கிராமம் என்றால் சரிதான். எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 4 நபர்கள் ஆவார்கள். எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எங்கு உள்ளார்கள் என்றால் வாகைகுளம் கிராமத்தில் உள்ளார்கள். எனது தாயாரின் சொந்த ஊர் ஆர்.எஸ்.மங்கலம் தாலுகாவில் உள்ள ஆனந்தூர் பக்கத்தில் உள்ள சாத்தனூர்.

2. தங்கச்சாமி தேவரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் நடராஜதேவர். எனது தாயாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் 5 நபர்கள். எனது தாயாருடன் உடன் பிறந்தவர்களுக்கு யார் யாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் பொன்னாள் என்பவருக்கு வாரிசு இல்லை, காளியம்மாள் என்பவருக்கு ஒரு ஆண் வாரிசு, வேலு என்பவருக்கு ஒரு ஆண், ஒரு பெண்

வாரிசுகள், அம்மாக்கண்ணு என்பவருக்கு 2 ஆண்கள் மற்று 3 பெண்கள் வாரிசுகள், அமிர்தம் என்பவருக்கு வாரிசு இல்லை.

3. அம்மாக்கண்ணு என்பவரின் வாரிசுகள் எங்கு உள்ளனர் என்றால் புளிக்குளம் ஊரில் உள்ளனர், 3 பெண் மக்களில் ஒருவர் திருமணமாகி காக்காச்சியேந்தல், மற்றொருவர் விரதவயல், இன்னொரும் ஒருவர் வென்னிரூர். என்னுடைய தகப்பனார் பெயரில் சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டதா என்றால் இல்லை.

4. தாவா சொத்துக்களின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் ஒருசில இடங்களுக்கு மட்டும் தெரியும். தாவா 3 வது சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண். 441/1 சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண். 411/1–பி சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் வடக்கு பக்கம் மேய்ச்சல் தரிசு, தெற்கு பக்கம் எனது தங்கை நிலம், மேற்கு பக்கம் எனது நிலம் உள்ளது, கிழக்கு பக்கமும் என்னுடைய நிலமே உள்ளது.

5. சர்வே எண். 410/2–பி சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் வடக்கு பக்கம் மேய்ச்சல் தரிசு, தெற்கு பக்கம் எனது தங்கை நிலம், மேற்கு பக்கம் எனது நிலம் உள்ளது, கிழக்கு பக்கமும் என்னுடைய நிலமே உள்ளது. சர்வே எண். 432/2 சர்வே எண். 410/2–பி சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மற்ற சர்வே எண்களுக்கு நான்குமால் விபரம் தெரியாது.

6. நான் தாக்கல் செய்த வழக்கில் நான்குமால் விபரம் சொல்லவில்லை என்றால் ஒரு சில இடங்களுக்கு சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்கில் நான்குமால் விபரம் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக ஒருசில

இடங்களுக்கு மட்டும் சொல்லியுள்ளேன் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் யார் பெயரில் இருந்து சொத்து மாற்றப்பட்ட விபரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் யார் பெயரில் இருந்து எனது பெயருக்கு மாறுதல் செய்யப்பட்டது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

8. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 13 இலக்க சொத்துகளுக்கு தனித்தனியா விஸ்திரங்கள் என்னவென்றால் தெரியாது, ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

9. எனது பெயரில் பட்டா வழுங்கக்கோரி எப்பொழுது மனு கொடுத்தேன் என்றால் 2011ம் ஆண்டு கொடுத்தேன். பட்டா எனது பெயருக்கு எப்பொழுது வந்தது என்றால் 2016ம் ஆண்டு வந்தது. எனது பெயரில் பட்டா வழுங்கக்கோரி மனு கொடுத்தபோது உடன் என்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால் எனது பெரியப்பா தங்கச்சாமி எனக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணத்தை கொடுத்தேன்.

10. எனக்கு உயில் எழுதிய கொடுத்ததாக சொல்லப்படும் தங்கச்சாமி இறந்துவிட்டதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தங்கச்சாமியின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்,

வாங்கவில்லை, 2006 ம் ஆண்டு கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டேன், பின்பு 2007 ம் ஆண்டு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். மேற்படி விபரங்களை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. வருவாய் கோட்டாட்சியரிடம் இறப்பு சான்றிதழ் வாங்கினேனா என்றால் முன்பே இறப்பு சான்றிதழ் கொடுக்கப்பட்டது என திருப்பப்பட்டது. முன்பே யார் இறப்பு சான்றிதழ் வாங்கி சென்றார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை.

12. 2007 ம் ஆண்டு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுக்கும்போது வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன், பிரச்சினை ஏற்பட்டால் நீதிமன்ற செல்ல சொல்லி அறிவுறுத்தினார். மேற்படி தங்கச்சாமிக்கு இறப்பு சான்றிதழோ, நான் தான் வாரிசு என்றோ யாதொரு நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. எனது தாயாருடன் உடன் பிறந்த சகோதர, சாகோதரரிகளுடன் மேற்படி உயில் பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன், மேற்படி உயில் பற்றி வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு நகலயோ, நிராகரிக்கப்பட்டதற்கான அத்தாட்சியோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையொப்பங்கள் செய்துள்ள நபர்களின் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி இல்லை என்றால் சரிதான், எனது பெரியப்பா தங்கச்சாமி மேற்படி விபரங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். வா.சா.ஆ.3 ஆவணம் எவ்வளவு ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டது என்றால் 5000

ரூபாய் முத்திரை தாள் என சொன்னார்கள். மேற்படி முத்திரை தாள் ஆவணத்தை நான் தான் கையொப்பம் செய்து வாங்கினேன். எங்கு, யாரிடம் வாங்கினேன் என்றால் மதுரையில் வழக்கறிஞரிடம் வாங்கினேன், அந்த வழக்கறிஞரின் பெயர் தெரியவில்லை. என்றைய தேதிக்கு நான் முத்திரை தாள் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வருடம் முத்திரை தாள் வாங்கினேன் என்றால் 2005 ம் வருடம், 5 ம் மாதம்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை